සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

# இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இல் உள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2011 (2012)

# Open Competitive Examination for Recruitment to Class III of the Sri Lanka Administrative Service - 2011 (2012)

## (02) கட்டுரையும் சுருக்கமும்
## Essay and Precis

இரண்டு மணித்தியாலம்
*Two hours*

இரு வினாக்களுக்கும் விடை எழுதுக.

**1.** கீழ்க் குறிப்பிடப்பட்ட தலைப்புகளில் **ஒன்றைத்** தெரிவு செய்து அது தொடர்பான பகுப்பாய்வும் தர்க்க ரீதியும் வாய்ந்த விடயங்களை முன்வைத்து 250 – 300 சொற்களில் கட்டுரை ஒன்று எழுதுக.

(i) பட்சபாதமின்றி மக்களுக்கு நேயமான சேவையை வழங்கும்போது இலங்கை நிர்வாக சேவை அலுவலர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் சவால்களும்

(ii) இலங்கையின் மின் ஊடக விளம்பரங்களின் நியமம், நம்பகத்தன்மை, பொருத்தப்பாடு ஆகியன

(iii) உலக வல்லரசுகளின் உத்தரவுகளின் மூலமும் தடைசெய் கட்டளைகளின் மூலமும் அபிவிருத்தி அடையும் நாடுகளில் ஏற்படும் தாக்கம்

(iv) பல்லின, பல்சமய, பல்மொழிச் சமூகங்கள் இருக்கும் நாடுகள் முரண்பாடுகளைத் தீர்க்கும்போதும் ஒருங்குவாழலை ஏற்படுத்தும்போதும் பயன்படுத்துவதற்கு உகந்த உத்திகள்

(v) உலகின் சில நாடுகளில் இருக்கும் பொருளாதாரப் பணவீக்கம், நிதி நெருக்கடி ஆகியவற்றின் விளைவாக அரச ஆட்சியாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையே ஏற்படக்கூடிய அபிப்பிராயங்களும் எதிர்ப்புகளும்

(vi) கைத்தொழின்மயமாதல், வர்த்தகமயமாதல் ஆகியவற்றின் விளைவாக எந்த ஒரு நாட்டிலாயினும் பண்பாடு, ஒழுக்கம் என்பன தொடர்பாகப் புதிய போக்குகள் ஏற்படுதல் ஓர் இயற்கை நிகழ்ச்சியாகும்.

**2.** கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள பகுதியை வாசித்து அதனை **மூன்றிலொரு** பகுதியாக மட்டும் சுருக்கி எழுதுவதோடு அதற்குப் பொருத்தமான தலைப்பொன்றையும் இடுக. (சுருக்கத்தின் முடிவில் உமது சுருக்கத்திலுள்ள சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

இலங்கைக்குப் GSP + தீர்வைச் சலுகைகள் யூலை 2005 - டிசம்பர் 2008 வரையான காலப்பகுதிக்கு 2005 இல் விதிக்கப்பட்டது. இலங்கையானது GSP இன் கீழ் வழங்கப்படும் மேலதிக முன்னுரிமையைப் பெற்றுக் கொள்ளும் 16 பயனாளி நாடுகளில் ஒன்றாக இருப்பதுடன் தென் ஆசியப் பிராந்தியத்தில் அதனைப் பெறும் ஒரே ஒரு நாடாகவும் விளங்குகின்றது.

2008 இன் இரண்டாம் காலப்பகுதியில் மீள வழங்கப்படக்கூடிய GSP + சலுகைகளின் தொடர்ச்சியின் நிச்சயமற்ற தன்மை தொடர்பாக அனைத்து தொடர்புடையோரும் தெரிந்து வைத்திருந்தனர். இருப்பினும் GSP + சலுகைகள் ஆரம்பத்தில் இலங்கை ஏற்றுமதியாளர்கட்குத் தமது உற்பத்திகளின் உயர் தரத்தினையும் உரிய நேரத்தில் வழங்கலை மேற்கொள்ளும் உறுதிப்பாட்டினையும் ஐரோப்பிய சந்தையில் தெரியப்படுத்துவதற்கு உதவி புரிந்தது. எனவே இந்த வர்த்தக உடன்படிக்கைகளின் மூலம் சேர்த்துக் கொண்ட அனுபவங்களும் நன்மதிப்பும் உற்பத்திகளை மேலும் அபிவிருத்தி செய்வதற்குத் தயார்ப்படுத்தும் அதேவேளை அவர்களின் பாதையில் விரிந்த சந்தை வாய்ப்புகளில் புதிய சந்தைகளைக் கைப்பற்றுவதற்கும் உற்பத்தித் திறனுக்குமான முறைகளைச் சரிவரச் செயற்படுத்துவதனையும் வலுப்படுத்தும்.

சலுகைகள் வழங்கப்படாததொரு நிலைமை ஏற்படுமானால் அது கைத்தொழில்களில் வேறுபட்ட தாக்கங்களை ஏற்படுத்தும். தமது வியாபாரத்தை முன் கொண்டு செல்ல எந்த மாற்றங்களையும் மேற்கொள்ளாது பெரிய அளவில் சலுகைகளில் தங்கியிருக்கும் சில கைத்தொழில்கள் சிலவேளை அதிக அளவில் பாதிக்கப்படக்கூடும். இருப்பினும் GSP + நன்மைகள் இல்லாத சூழலில் சிறந்த முகாமைத்துவச் செயற்படுத்துகையினால் உற்பத்திச் செயற்பாடுகளில் செயற்றிறனை அதிகரித்தல் மற்றும் புதிய தொழினுட்பங்களைக் கையாளுதல் போன்ற பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் சில கைத்தொழில்கள் சவாலை எதிர்கொள்ளக்கூடிய நிலையில் காணப்படுகின்றன. தைத்த ஆடைகள் கைத்தொழிலானது குறிப்பாகப் போட்டித்தன்மை வாய்ந்த தைத்த ஆடைக்கான நிலையை உலகத்தரம் வாய்ந்த வசதிகள் மற்றும் உட்கட்டுமானங்களுடன் தன்னகத்தே உருவாக்கிக் கொள்வதற்குக் குறிப்பிடத்தக்க நகர்வுகளை மேற்கொண்டது.

GSP + சலுகைகள் இல்லாத சூழ்நிலையில் ஏற்படும் சவால்களையும் இலங்கைக் கைத்தொழில்கள் வெற்றி கொண்டு வலுவாக வளர்ச்சியடையும். இதன்படி GSP + சலுகைகளின் நிறுத்தப்படக் கூடிய சாத்தியப்பாடுகள் கைத்தொழிலாளர்களையும் ஏற்றுமதியாளர்களையும் தமது போட்டி ரீதியிலான சாதகத் தன்மையினை அதிகரிப்பதற்கும் உற்பத்திச் செயற்பாட்டில் செயற்றிறனை அதிகரிப்பதற்கும் உதவும் அதேவேளை அவர்கள் தமது உற்பத்திகளின் அளவினைப் பன்முகப்படுத்துவதற்கும் புதிய சந்தைகளைத் தேடுவதற்குத் தூண்டுவதுடன் நீண்ட காலத்தில் இலங்கை ஏற்றுமதிகளை மிகுந்த போட்டித்தன்மையுடையதாகவும் ஆக்கும்.

* * *

ජාතික ඇගයීම් හා පරීක්ෂණ සේවාව தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை National Evaluation and Testing Service ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations
Department of Examinations
National Evaluation and Testing Service

සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

# இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இல் உள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2011 (2012)

# OPEN COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO CLASS III OF THE SRI LANKA ADMINISTRATIVE SERVICE - 2011 (2012)

## (03) பொது அறிவு
## General Knowledge

**இரண்டு மணித்தியாலம்**
**Two hours**

பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்

**மிக முக்கியம் :**

* பென்சிலால் எழுதப்படும் விடைத்தாள்களும் அழிக்கும் (வெண்) மை பயன்படுத்தப்பட்ட விடைத்தாள்களும் மதிப்பிடப்படமாட்டாது.
* பகுதி I இற்கு விடை எழுதும் போது பின்வருமாறு இலக்கங்கள் எழுதப்படாத முறையை விட வேறு முறையில் எழுதப்படும் இலக்கங்களைக் கொண்ட விடைத்தாள்களும் மதிப்பிடப்படமாட்டாது.

**1 2 3 4**

இங்கும் பக்கம் 3 இலும் பக்கம் 5 இலும் உமது சுட்டெண்ணை எழுதுக.

.............................................

சுட்டெண்

சரியானது என உறுதிப்படுத்துகிறேன்.

.............................................

நோக்குநரின் முதலெழுத்தொப்பம்

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் :**

* இவ்வினாத்தாள் **இரண்டு** பகுதிகளைக் கொண்ட **10** பக்கங்களில் கொண்டுள்ளது.
* பகுதி **I** இல் **50** பலவினுள் தெரிவு வினாக்களும் பகுதி **II** இல் **50** குறுகிய விடை வகை வினாக்களும் இடம்பெற்றுள்ளன.
* எல்லா வினாக்களுக்கும் விடைகளை **இத்தாளிலேயே** எழுதுக.
* இவ்வினாத்தாளுக்குரிய நேரம் **இரண்டு மணித்தியாலம்** ஆகும்.
* மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.
* **உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டா.**
* விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்.
* விடைகளைத் தெளிவாக **நீல** அல்லது **கறுப்பு** மைப் பேனாவினால் எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**
* இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதன் ஒளிப்பிரதியை (photocopy) எடுத்தல் என்பன குற்றங்களாகும்.
* **தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற எழுத்துக்கள், அழிக்கும் (வெண்)மைப் பயன்பாடு, பென்சிலின் பயன்பாடு என்பவற்றுக்கு மதிப்பீட்டின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டா.**

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| பக்க எண் | | வினா எண் | புள்ளிகள் |
|---|---|---|---|
| I | 2 | 1 - 12 | |
| | 3 | 13 - 21 | |
| | 4 | 22 - 32 | |
| | 5 | 33 - 42 | |
| | 6 | 43 - 50 | |
| II | 7 | 51 - 63 | |
| | 8 | 64 - 76 | |
| | 9 | 77 - 89 | |
| | 10 | 90 - 100 | |
| | மொத்தம் | | |

| | | |
|---|---|---|
| மொத்தம் | இலக்கத்தில் | |
| | எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் 1 | |
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் 2 | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |

## பகுதி I

- **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் தரப்பட்டுள்ள விடைகளிடையே **சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத்** தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் **இலக்கத்தை** வினாவிற்கு எதிரே தரப்பட்டுள்ள **புள்ளிக்கோட்டின்** மீது எழுதுக.

1. 2010 ஆம் ஆண்டின் இலங்கை மத்திய வங்கி அறிக்கைக்கேற்ப இவ்வாண்டின் இறுதியில் இலங்கையில் ஆள்வீத வருமான இலக்கு எத்தனை ஐக்கிய அமெரிக்க அரசுகள் டொலர் ?
   (1) 2900 (2) 3000 (3) 3100 (4) 3200 (……)

2. தற்போது இலங்கையின் தொழிலின்மை வீதம்
   (1) 7.4% (2) 6.3% (3) 5.2% (4) 4.2% (……)

3. ஏனைய சார்க் நாடுகளுடன் ஒப்பிடப்படும்போது இலங்கை அடைந்துள்ள **விசேட** அந்தஸ்து
   (1) எழுத்தறிவின்மை இழிவளவாக இருத்தல்
   (2) உட்கட்டுமான வசதிகள் வளர்ச்சியடைதல்
   (3) அரசியல் உறுதிப்பாட்டைப் பெற்றிருத்தல்
   (4) மக்களின் திறன் அதிகரித்தல் (……)

4. நாட்டின் ஒவ்வொரு வீட்டிற்கும் மின்வலுவை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஆண்டு
   (1) 2013 (2) 2014 (3) 2015 (4) 2016 (……)

5. இலங்கையின் தற்போதைய சனத்தொகை பற்றிய **பிழையான** கூற்று பின்வருவனவற்றுள் யாது ?
   (1) சனத்தொகை 21.1 மில்லியன்கள் மட்டுமேயாகும்.
   (2) 65 வயதைவிடக் கூடியவர்களின் சனத்தொகை 10.5% மட்டுமேயாகும்.
   (3) ஆயுள் எதிர்வு 75 வருடங்கள் மட்டுமாகும்.
   (4) கர்ப்பிணித் தாய்மார்களின் இறப்பு வீதம் இலட்சத்திற்கு 39 ஆகும். (……)

6. இலஞ்சம், ஊழல் என்பன தொடர்பாக அறிவிக்க வேண்டிய இலங்கை ரெலிகொம் நேரடித் தொலைபேசி எண் பின்வருவனவற்றுள் யாது ?
   (1) 1924 (2) 1954 (3) 1964 (4) 1984 (……)

7. இலங்கையின் தேசியக் கொடியை ஏற்றும்போது **பின்பற்றக்கூடாத** நடைமுறை யாது ?
   (1) வேறு கொடிகளை ஏற்று முன்பாக அதனை ஏற்றல்
   (2) எல்லா அரசாங்க விழாக்களிலும் அதனை ஏற்றுதல்
   (3) சமயக் கொடிகளுக்குக் கீழே அதனை ஏற்றுதல்
   (4) உற்சவரீதியாக மெதுவாக அதனை ஏற்றுதல் (……)

8. காலநிலை நெருக்கடி தொடர்பாக இலங்கை மேற்கொண்டுள்ள மிக முக்கிய நடவடிக்கை யாது ?
   (1) "ஹரிதலங்கா" என்னும் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்
   (2) சுற்றாடல் காப்பு நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்
   (3) ஒரு தேசியக் கொள்கையைத் தயாரித்தல்
   (4) காலநிலை மாற்றங்கள் பற்றி மக்களுக்கு அறிவுறுத்தல் (……)

9. இலங்கையின் **முதலாவது** முதலை விவசாயப் பண்ணை எங்கு ஆரம்பிக்கப்பட்டது ?
   (1) மாத்தறை (2) களுத்துறை (3) பென்தர (4) முத்துராஜவல (……)

10. **முதன்முதலாக** இலங்கையிலிருந்து 10 000 தொன் சோளம் ஏற்றமதி செய்யப்பட்டது
    (1) தாய்லாந்திற்கும் கனடாவிற்கும் (2) சீனாவிற்கும் பிலிப்பீன்ஸ் தீவுகளுக்கும்
    (3) மாலை தீவுகளுக்கும் ஓமானுக்கும் (4) நேபாளத்திற்கும் பாகிஸ்தானிற்கும் (……)

11. தற்போது இலங்கையின் வனப் பிரதேசம் (Forest area) நாட்டின் மொத்த நிலப் பரப்பளவில் என்ன சதவீதமாகும் ?
    (1) 21% (2) 24% (3) 27% (4) 29% (……)

12. இலங்கையின் பாரம்பரிய கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கு முன்வந்துள்ள நாடு
    (1) இந்தியா (2) சீனா (3) தென் கொரியா (4) யப்பான் (……)


(பக். 3 ஐப் பார்க்க

13. இலங்கை உல்லாசப் பயணக் கைத்தொழில் பற்றிய **பிழையான** கூற்று பின்வருவனவற்றுள் யாது ?
   (1) இலங்கையின் உல்லாசப் பயணக் கைத்தொழில் நூற்றுக்கு நூறு தனியார் துறைக்குரியது.
   (2) உல்லாசப் பயணக் கொள்கைகளைத் தயாரித்தல் அரசாங்கத்தின் பணியாகும்.
   (3) இவ்வாண்டில் இலங்கைக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 950 000 ஆகும்.
   (4) தற்போது கூடுதலான உல்லாசப் பயணிகள் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து வருகின்றனர். (......)

14. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் 1992 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட தேசியத் பொது நோக்கங்களில் முதலாவது நோக்கம் "உயிர்ப்பான தேசிய ஒருமைப்பாட்டையும் தேசிய தனித்துவத்தையும் தேசிய சமாதானத்தையும் உருவாக்குதல்" ஆகும். இதற்காகச் சர்வதேசரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறை
   (1) பரஸ்பர வரலாறு பற்றிய கல்வியை வழங்குதல்
   (2) பல்பண்பாட்டுக் கல்வியை வழங்குதல்
   (3) ஒருங்கு வாழல் பற்றிய கல்வியை வழங்குதல்.
   (4) பழக்க வழக்கங்கள் பற்றிய கல்வியை வழங்குதல் (......)

15. 2016 ஆம் ஆண்டளவில் இலங்கையில் கணினி பற்றிய அறிவுடைமையை 75% வரைக்கும் மேம்படுத்துதல் அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும். தற்போது இந்நாட்டின் கணினி அறிவுடைமை ஏறத்தாழ
   (1) 25% (2) 30% (3) 35% (4) 40% (......)

16. இலங்கையில் இருக்கும் **உலக மரபு** (பாரம்பரிய)ச் **செல்வ அமைவிடங்கள் கூடுதலாக** இருக்கும் இடங்கள் இடம்பெறும் விடை யாது ?
   (1) அனுராதபுரம், பொலநறுவை, தம்புள்ளை, காலி, கண்டி, சிகிரியா
   (2) அனுராதபுரம், பொலநறுவை, தம்புள்ளை, கண்டி, திஸ்ஸமாராம, சிகிரியா
   (3) அனுராதபுரம், பொலநறுவை, சிகிரியா, தம்புள்ளை, காலி, சித்துல்பவ்வ
   (4) அனுராதபுரம், பொலநறுவை, சிகிரியா, தம்புள்ளை, கண்டி, அலுவிகாரை (......)

17. இலங்கையின் **முதலாவது** தொழிலாளர் மே தினம் நடைபெற்ற ஆண்டு
   (1) 1933 (2) 1948 (3) 1956 (4) 1978 (......)

18. இவற்றுள் **பொருத்தமற்ற** சோடி எது ?
   (1) ஈ.டபிள்யூ பெரேரா - நாடகம்
   (2) வண. பீற்றர்ப் பிள்ளை - கல்வி
   (3) பெரிசுந்தரம் - தொழிலாளர் இயக்கம்
   (4) ஜெவ்ரி பாவா - கட்டடக்கலை (......)

19. பின்வரும் மத்திய கிழக்கின் எந்நாணய அலகை மாற்றும்போது **குறைந்த** அளவு இலங்கை ரூபாய் கிடைக்கும் ?
   (1) குவைத் டினார்
   (2) பஹ்றைன் டினார்
   (3) கட்டார் றியால்
   (4) ஓமன் றியால் (......)

20. எம்மாகாணத்தில் பொருளாதாரரீதியில் 25 000 ஏக்கரில் சோயா அவரையைப் பயிரிடுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது ?
   (1) வடமேல் மாகாணம் (2) வட மத்திய மாகாணம்
   (3) ஊவா மாகாணம் (4) தென் மாகாணம் (......)

21. இலங்கையைச் "செரண்டிப்" என்னும் பெயரினால் அழைத்தவர்கள்
   (1) கிரேக்கர் (2) ரோமர் (3) அராபியர் (4) போர்த்துக்கேயர் (......)

22. தற்போதைய இந்தியாவின் அரசியல் நிலைமை, இந்தியத் தனித்துவம், பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றை உருவாக்குவதற்கு **அதிக** அளவில் உதவிய தலைவர்கள் இடம்பெறும் விடை யாது ?

(1) மாகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு, இரவீந்திரநாத் தாகூர், பீ. ஆர். அம்பேட்கார்

(2) மாகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு, ஜெயபிரகாஷ் நாராயணன், ராஜேந்திர பிரசாத்

(3) மாகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு, இரவீந்திரநாத் தாகூர், விநோபா பாவே

(4) மாகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு, இரவீந்திரநாத் தாகூர், ஹுமாயூன் கபீர் (......)

23. அண்மையில் அரசியல்ரீதியில் பிரசித்தி பெற்றுள்ள தாஹிர் சதுக்கம் (Tahir Square) இருக்கும் நாடு

(1) எகிப்து (2) சீனா (3) தென்கொரியா (4) யப்பான் (......)

24. இந்தியாவின் "தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் நகரம்" யாது ?

(1) புதுடில்லி (2) பங்களூர் (3) மும்பாய் (4) சென்னை (......)

25. மிக அண்மையில் அணு சக்தி மூலம் இயக்கப்படும் நீர்மூழ்கிக் கப்பலை உற்பத்தி செய்துள்ள நாடு யாது ?

(1) பிரான்ஸ் (2) ரூசியா (3) சீனா (4) இந்தியா (......)

26. ஆபிரிக்காவின் சில நாடுகள் அபிவிருத்திக்காக ஆசியாவின் பொருளாதார வல்லரசுகளிலிருந்து உதவியைப் பெறுகின்றன. அந்நாடுகளுக்கு **அதிக** அளவில் கடன் உதவியளித்துள்ள நாடு யாது ?

(1) இந்தியா (2) சீனா (3) சிங்கப்பூர் (4) மலேசியா (......)

27. உலகில் சனத்தொகை **மிக்க** நகரம் இவற்றுள் யாது ?

(1) டோக்கியோ (2) நியூயோர்க் (3) ஜெனிவா (4) லண்டன் (......)

28. **நியமச்** (Standard) சீன மொழிக்கு வழங்கும் பெயர் யாது ?

(1) புஸ்ரோ (Pashto) (2) சொங்கா (Dzongkha) (3) சுவாஹிலி (4) மண்டரின் (......)

29. ஆதிவாசிகளின் தலைவர் ஒருவர் சனாதிபதியாகத் தெரிந்தெடுக்கப்பட்ட நாடு யாது ?

(1) சிலி (2) பேரு (3) பரகுவே (4) பொலிவியா (......)

30. உலக வரலாற்றிலே நடைபெற்ற மிக முக்கியத்துவம் வாய்ந்த நான்கு புரட்சிகள் தொடர்பான 4 ஆண்டுகள் கீழே காணப்படுகின்றன. அவற்றில் கியூபாப் புரட்சி நடைபெற்ற ஆண்டு எது ?

(1) 1789 (2) 1917 (3) 1949 (4) 1959 (......)

31. உலகின் சமுத்திரங்கள் அவற்றின் பருமனுக்கேற்பச் **சரியாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள** விடை யாது ?

(1) பசிபிக் சமுத்திரம், அத்திலாந்திக் சமுத்திரம், இந்து சமுத்திரம், ஆட்டிக் சமுத்திரம்

(2) அத்திலாந்திக் சமுத்திரம், பசிபிக் சமுத்திரம், இந்து சமுத்திரம், ஆட்டிக் சமுத்திரம்

(3) இந்து சமுத்திரம், பசிபிக் சமுத்திரம், அத்திலாந்திக் சமுத்திரம், ஆட்டிக் சமுத்திரம்

(4) ஆட்டிக் சமுத்திரம், பசிபிக் சமுத்திரம், அத்திலாந்திக் சமுத்திரம், இந்து சமுத்திரம், (......)

32. பின்வரும் எவ்விடையில் BIMSTEC நாடுகள் **யாவும்** குறிப்பிடப்பட்டுள்ளன ?

(1) நேபாளம், இந்தியா, பூட்டான், இலங்கை, பங்களாதேஷ், சிங்கப்பூர், மலேசியா

(2) நேபாளம், இந்தியா, பூட்டான், இலங்கை, பங்களாதேஷ், மியன்மார், கம்போடியா

(3) நேபாளம், இந்தியா, பூட்டான், இலங்கை, பங்களாதேஷ், சிங்கப்பூர், பிலிப்பீன் தீவுகள்

(4) நேபாளம், இந்தியா, பூட்டான், இலங்கை, பங்களாதேஷ், மியன்மார், தாய்லாந்து (......)



(பக். 5 ஐப் பார்க்க

33. பின்வருவனவற்றுள் **பிழையான** கூற்று யாது ?

(1) தற்போது உலகில் 5 மக்களில் ஒருவர், அதாவது 1.4 பில்லியன் மக்கள் தினமும் 1.25 ஐக்கிய அமெரிக்க அரசுகள் டொலரிலும் குறைந்த வருமானத்துடன் வாழ்கின்றனர்.

(2) உலகில் ஒவ்வொரு நாளும் ஏறத்தாழ ஒரு பில்லியன் மக்கள் பட்டினியுடன் இரவில் துகில்கின்றனர்.

(3) காலநிலை மாற்றங்களை இழிவளவாக்காவிட்டால் உலகில் உள்ள விலங்கினங்களும் தாவர இனங்களும் அதிக அளவில் அழிந்து போகும்.

(4) 2015 ஆம் ஆண்டளவில் உலகின் சனத்தொகை ஏறத்தாழ 8 பில்லியனாக இருக்கும். (......)

34. கடல் மட்டத்திலிருந்து மிகவும் உயரத்தில் உள்ள நகரம் யாது ?

(1) திம்பு (2) லாசா (3) காத்மாண்டு (4) சிம்லா (......)

35. சில சமூகவியலாளர்களுக்கேற்பத் தற்போதைய நாகரிகங்களிடையே முரண்பாடு (Clash of Civilizations) உண்டாவதாகக் கருதப்படுகின்றது. அம்முரண்பாடு ஏற்படுவது

(1) அமெரிக்க நாகரிகத்திற்கும் இஸ்லாமிய நாகரிகத்திற்கும் இடையே

(2) அமெரிக்க நாகரிகத்திற்கும் சீன நாகரிகத்திற்கும் இடையே

(3) ஐரோப்பிய நாகரிகத்திற்கும் இந்திய நாகரிகத்திற்கும் இடையே

(4) ஐரோப்பிய நாகரிகத்திற்கும் ஆபிரிக்க நாகரிகத்திற்கும் இடையே (......)

36. அணிசேரா இயக்கம் தொடர்பாகப் **பிழையான** கூற்று யாது ?

(1) அதன் முதலாவது மாநாடு 1961 ஆம் ஆண்டில் பெல்கிரேட் நகரில் நடைபெற்றது.

(2) அதன் தற்போதைய உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை 120 ஆகும்.

(3) அதன் நோக்கம் நடுநிலைமையைப் பின்பற்றுவதாகும்.

(4) அது ஐக்கிய நாடுகளின் கொள்கைகளுக்கு ஒத்துழைப்பு அளிக்கின்றது. (......)

37. அகிரா குரோசாவா (Akira Kurosawa) என்பவர் யப்பானில் வாழ்ந்த சிரேட்ட

(1) வரலாற்று அறிஞர் ஆவார் (2) சமூக விஞ்ஞானி ஆவார்.

(3) திரைப்படத் தயாரிப்பாளர் ஆவார். (4) சமூக சேவகர் ஆவார் (......)

38. மிகவும் மோசமான நோயானதும், குணப்படுத்த முடியாததும் நோயாளியின் வேண்டுகோளுக்கேற்ப மருத்துவரின் துணையுடன் அந்நோயாளியின் வாழ்க்கையை முடிவுறுத்தலைச் (euthanasia) சட்டரீதியாக்கியுள்ள நாடு யாது ?

(1) பெல்ஜியம் (2) நோர்வே (3) டென்மார்க் (4) சுவீடன் (......)

39. சிறுவர் உரிமைகள் பற்றிய பிரகடனம் (Convention on the Rights of the Child) அங்கீகரிக்கப்பட்ட ஆண்டு யாது ?

(1) 1959 (2) 1969 (3) 1989 (4) 1999 (......)

40. 2011 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் தொடக்கம் மகளிருக்கு முதன்முறையாக வாக்குரிமையை வழங்கிய நாடு யாது ?

(1) சவூதி அரேபியா (2) ஈரான் (3) ஈராக் (4) கட்டார் (......)

41. ஐக்கிய நாடுகளுடன் உறுப்பினராக இணைந்த 193 ஆவது நாடு யாது ?

(1) வட சூடான் (2) தென் சூடான் (3) கிழக்குத் தீமோர் (4) கிரிபத்தி (......)

42. 1990 ஆம் ஆண்டில் UNDP தாபனத்தினால் முன்வைக்கப்பட்ட, தற்போது மிகவும் பிரசித்தி பெற்றுள்ள மனித அபிவிருத்திச் சுட்டியின் ஒரு கூறாக (Component) **அமையாதது** யாது ?

(1) ஆயுள் எதிர்வு (2) கல்வி

(3) மொத்தத் தேசிய வருமானம் (4) நல்லாட்சி (......)

43. சர்வதேச எழுத்தறிவு தினம் (International Literacy Day) அனுட்டிக்கப்படும் திகதி யாது ?

(1) யூன் 5 (2) யூலை 11
(3) செப்ரெம்பர் 8 (4) ஒக்ரோபர் 24 (……)

44. பின்வரும் வாக்கியங்களிடையே எது ஒரு **கொள்கையை** எடுத்துரைக்கின்றது ?

(1) அரசாங்கம் என்ற தாபனம் எப்போதும் நல்லொழுக்கம் உடையதாக இருக்க வேண்டும்.
(2) விஞ்ஞானம் மேம்பாடடைந்தபோதும் அதனால் வாழ்க்கை நோக்கங்கள் எடுத்துரைக்கப்படுவதில்லை.
(3) உலகில் உள்ள ஒரே நிலையான விடயம் மாற்ற இயல்பாகும்.
(4) அபிவிருத்திக்குத் தனியார் துறையின் ஒத்துழைப்பு இன்றியமையாதது. (……)

45. தற்போது மனித இனம் எதிர்கொள்ளும் **பிரதான** பிரச்சினை

(1) மீளப்பிறப்பிக்க முடியாத வளங்கள் விரயமாதல்
(2) அணு ஆயுதங்களின் உற்பத்தி பரவிக் காணப்படுதல்
(3) கைத்தொழின்மயமாதல் காரணமாக உலகம் வெப்பமடைதல்
(4) உலகக் கிராமத்தினுள் மனிதனைக் குலவியல்பிலிருந்து விடுவிக்கப்படாமை (……)

46. உலக வரலாற்றை மாற்றுவதற்கு ஏதுவான சில பிரதான புதிய கண்டுபிடிப்புகள் சீனாவில் மேற்கொள்ளப்பட்டன. பின்வருவனவற்றில் சீனாவிற்கு உரியதாக **அமையாத** புதிய கண்டுபிடிப்பு யாது ?

(1) கடதாசி
(2) வெடிமருந்து
(3) காந்தத் திசைகாட்டி (Magnetic Compass)
(4) உருப்பெருக்கும் கண்ணாடி (Magnifying glass) (……)

47. புவியைச் சுற்றிச் செல்வதற்குச் சந்திரன் எடுக்கும் நாட்களின் எண்ணிக்கை

(1) $26\frac{1}{2}$ (2) $27\frac{1}{2}$
(3) $28\frac{1}{2}$ (4) $29\frac{1}{2}$ (……)

48. தற்போது தயாரிக்கப்படும் சில உணவு வகைகளுக்குப் பயன்படுத்தப்படும் சேர்பொருள்கள் (additives) மனிதனின் சுகாதாரத்திற்குப் பாதகமானவை. சிலவேளைகளில் இவ்வாறு உணவுகளுடன் சேர்க்கப்படும் மஞ்சள் நிறமுள்ள சாய வகை யாது ?

(1) சோடியம் நைத்திரைட்டு (Sodium nitrite) (2) தாற்றஸீன் (Tartrazine)
(3) ஒலஸ்ரா (Olestra) (4) சக்கரின் (Saccharin) (……)

49. பாலின் தூய்மையை அளக்கும் கருவி யாது?

(1) லக்ரோமானி (Lactometer) (2) அம்பியர்மானி (Ammeter)
(3) சக்கரோமானி (Saccharometer) (4) மனோமானி (Manometer) (……)

50. ரோமன் இலக்கத்தில் 1984 குறிப்பிடப்பட்டுள்ள விடை யாது ?

(1) MCDIV (2) MDCIV
(3) MCMLXXXIV (4) MMIV (……)

## பகுதி II

- **51** தொடக்கம் **100** வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளைத் தரப்பட்டுள்ள **புள்ளிக் கோட்டின்** மீது எழுதுக.

51. இலங்கையின் முதலாவது துரிதகதி வீதியாகிய தென்னிலங்கைத் துரிதகதி வீதியின் வேலைகளை நிறைவேற்றியதும் அதன் மொத்த நீளம் எத்தனை கிலோமீற்றர் ?

.......................................................................................................................................

52. அண்மையில் இலங்கைக்கு வந்த இந்திய லோகசபையின் எதிர்க் கட்சித் தலைவியாகிய திருமதி சுஷ்மா சுவராஜ் எவ்வரசியல் கட்சியைச் சேர்ந்தவர் ?

.......................................................................................................................................

53. மாலைதீவுகளின் தேசிய கீதமாகிய "கவ்மீ சலாம்" (Gaumee Salaam) என்னும் கீதத்திற்கு இசையமைத்த இலங்கையர் யார் ?

.......................................................................................................................................

54. இலங்கையில் "யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழு" எவ்வமைச்சின் கீழ் நிறுவப்பட்டுள்ளது ?

.......................................................................................................................................

55. தற்போது இலங்கை மகளிரின் ஆயுள் எதிர்வு எத்தனை ஆண்டுகள் ?

.......................................................................................................................................

56. "பிம்சவிய" என்பது யாது ?

.......................................................................................................................................

57. அச்சுவேலிக் கைத்தொழில் நகருக்கு உதவியளிக்கும் நாடு யாது ?

.......................................................................................................................................

58. இலங்கையில் கறுவா ஆராய்ச்சித் தாபனம் எவ்விடத்தில் அமைக்கப்பட்டுள்ளது ?

.......................................................................................................................................

59. சர்வதேச நீதிமன்றத்தின் (International Court of Justice) பிரதித் தவிசாளராகப் பணியாற்றிய இலங்கையர் யார் ?

.......................................................................................................................................

60. சர்வதேசரீதியில் பிரசித்தி பெற்றுள்ளதும் இலங்கையில் அமைந்துள்ளதுமான அலை மிதவை ஆட்டக் (surfing) கடற்பிரதேசம் யாது ?

.......................................................................................................................................

61. ஒராபி பாஷா என்பவர் யாவர் ?

.......................................................................................................................................

62. இலங்கையில் "பாடும் மீன்களுக்குப்" பிரசித்தி பெற்ற இடம் யாது ?

.......................................................................................................................................

63. யாழ்ப்பாணத்தில் நல்லூர்ப் பிரதேசம் பிரசித்தி பெறுவதற்கு ஏதுவான இரு காரணங்கள் உள்ளன. அவற்றுள் **ஒரு** காரணத்தை எழுதுக.

.......................................................................................................................................

64. 1981 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட அடிப்படைக் கற்கை மன்றம் (The Institue of Fundamental Studies) இலங்கையின் எந்நகரத்தில் அமைந்துள்ளது ?

..............................................................................................................................................

65. 1988 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 17 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட இலங்கை அரசியலமைப்பிற்கான பதினாறாவது திருத்தம் யாது ?

..............................................................................................................................................

66. இலங்கையின் 9 ஆவது நிர்வாக மாகாணம் 1889 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அம்மாகாணம் யாது ?

..............................................................................................................................................

67. டொனமூர் அரசியலமைப்பின் கீழ் நிறுவப்பட்ட சட்டக் கழகத்திற்கு வழங்கிய பெயர் யாது ?

..............................................................................................................................................

68. பிரித்தானியரின் படையெடுப்புக்கு முன்பாக இலங்கையரிடம் இருந்த ஒருங்கு வாழலை வெளிப்படுத்தும் பல சந்தர்ப்பங்களில் **ஒரு** சந்தர்ப்பத்தைக் காட்டுக.

..............................................................................................................................................

69. தேசவழமைச் சட்டத்தை ஒருங்கிணைத்து அதனை ஒரு சட்டமாகப் பயன்படுத்திய முதலாவது ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளர்கள் யாவர் ?

..............................................................................................................................................

70. இலங்கைக்குரிய பண்டைய இருமைப் போராட்ட முறை யாது ?

..............................................................................................................................................

71. பிரித்தானியர்கள் ஒல்லாந்தர்களைத் தோற்கடித்து அவர்களுக்குரிய இலங்கைக் கடற்கரைப் பிரதேசங்களைக் கைப்பற்றிய ஆண்டு யாது ?

..............................................................................................................................................

72. விலங்குகளுக்குக்கூடச் சட்டத்தை நியாயமாக நிறைவேற்றிய புராதன இலங்கையில் வாழ்ந்த அரசர் யார் ?

..............................................................................................................................................

73. எவ்வரலாற்று நிகழ்ச்சி உலகில் அறிவிக்கப்பட்ட முதலாவது நுண்மதிப் பரீட்சையாகச் சில இலங்கை வரலாற்றறிஞர்களால் கருதப்படுகின்றது ?

..............................................................................................................................................

74. தற்போது இந்தியாவில் உள்ள பஞ்சாயத்து ஆட்சி முறை போன்று புராதன இலங்கையில் இருந்த மிகச் சிறிய ஆட்சி அலகு யாது ?

..............................................................................................................................................

75. தற்போதைய இலங்கையின் இலக்கிய, இசை, நாடகக் கலை ஆகியவற்றுக்கு ஒரு குறித்த முன்மாதிரி எந்த இந்திய அறிஞரிடமிருந்து கிடைத்தது ?

..............................................................................................................................................

76. தேசிய சரிதமான வேலைக்கடிமையாதலை (workaholism) வாழ்க்கைப் பாங்கின் பகுதியாகக் கொண்டவர்கள் வதியும் ஆசிய நாடு யாது ?

..............................................................................................................................................


(பக். 9 ஐப் பார்க்க

77. ஐக்கிய நாடுகளினால் தடை விதிக்கப்பட்டுள்ள ஒரு நாட்டைக் குறிப்பிடுக.

..........................................................................................................................................

78. காபன் காலலைக் குறைத்துக் கொண்டு துப்புரவான சக்தியை (Clear energy) நோக்கிச் செல்லும் ஆசிய நாடு ஒன்றைக் குறிப்பிடுக.

..........................................................................................................................................

79. கடந்த மார்ச் மாதம் நடந்த ஐக்கிய நாடுகளின் மனித உரிமை மாநாட்டில் இலங்கைக்குச் சார்பாக வாக்களித்த ஒரு தென் அமெரிக்க நாடு யாது ?

..........................................................................................................................................

80. கடந்த தசாப்தத்தில் பனிக்கட்டி மலை உருகுதல் இரு மடங்கிலும் பார்க்க அதிகரித்துள்ள இரு ஐரோப்பிய நாடுகளில் **ஒன்றைக்** குறிப்பிடுக.

..........................................................................................................................................

81. மிக அண்மையில் சீனாவிற்கும் பிலிப்பீன் தீவுகளுக்கும் இடையில் உருவாகியுள்ள பிணக்கிற்குக் காரணம் யாது ?

..........................................................................................................................................

82. இந்தியாவின் வெண்மைப் புரட்சி என்பது யாது ?

..........................................................................................................................................

83. சீனாவிலும் சில தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் தேசிய மருந்து வகைகளைத் தயாரிப்பதற்கு இவ்விலங்குகளின் கொம்புகள் பயன்படுத்தப்படுகின்றன. அதற்காகக் கொல்லப்படும் விலங்கு வகையைக் குறிப்பிடுக.

..........................................................................................................................................

84. சர்வதேசத் திகதிக் கோடு எத்தீவுகளுக்குக் குறுக்கே அமைந்துள்ளது ?

..........................................................................................................................................

85. உலகில் ஆறு **இல்லாத** ஒரு நாட்டைக் குறிப்பிடுக

..........................................................................................................................................

86. மிகவும் அண்மையிலிருந்து ஜனநாயக அரசியலை நோக்கிய நாட்டத்தைக் கொண்டிருக்கும் ஆசிய நாடு யாது ?

..........................................................................................................................................

87. ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 நாடுகளில் 17 நாடுகள் மாத்திரம் 'Eurozone' நாடுகளாகும். Eurozone நாடுகளின் சிறப்பியல்பு யாது ?

..........................................................................................................................................

88. 1986 ஆம் ஆண்டில் உக்கிரேனில் மிகப் பெரிய அணு மின்வலு நிலையம் வெடித்த இடத்தைக் குறிப்பிடுக.

..........................................................................................................................................

89. சுகாதாரம் தொடர்பாக ஆய்வுகளுக்கும் நாடுகளின் அபிவிருத்திக்கும் உதவியளிக்கும் உலகின் மிகப் பெரிய தனியார் அமைப்பைக் குறிப்பிடுக.

..........................................................................................................................................



(பக். 10 ஐப் பார்க்க

90. "இது மனிதன் வைத்த ஒரு சிறிய அடியாகும். ஆனால் அது மனித இனத்திற்குப் பெரிய பாய்ச்சலாகும்" (that's one small step for men but a great leap for mankind) என்னும் கூற்று 1969 ஆம் ஆண்டில் ஒரு நபரினால் செய்யப்பட்ட ஒரு பெரிய கூற்றாகும். இதைத் தெரிவித்தவர் யார் ?

.....................................................................................................................................

91. இலஞ்சத்திற்கும் ஊழலுக்கும் எதிராகக் குரல் எழுப்பும் "லோக்பால்" என்னும் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு இந்திய அரசை வலியுறுத்தும் சமூகத் தீவிரவாதியைக் (Social activist) குறிப்பிடுக.

.....................................................................................................................................

92. 1967 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட ASEAN என்னும் குறுக்கத்தினால் அழைக்கப்படும் அமைப்பின் முழுப் பெயரையும் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் எழுதுக.

.....................................................................................................................................

93. "அரங்கேற்றம்" என்பதை அறிமுகஞ் செய்க.

.....................................................................................................................................

94. இஸ்லாம் மதத்திற்கெதிரான கருத்துகளைத் தனது நவீனத்தில் முன்வைத்தமையால் இஸ்லாமியர்களின் சீற்றத்திற்கு ஆளாகிய நாவலாசிரியர் யார் ?

.....................................................................................................................................

95. 35 000 அடி ஐ விடக்கூடிய ஆழம் உள்ள கடல் தானமாகிய மரியானா ஆகழியில் அண்மையில் சுழியோடிய திரைப்பட இயக்குனர் யார் ?

.....................................................................................................................................

96. எதிர்வரும் யூலை மாதம் 27 ஆந் திகதி ஆரம்பமாகும் லண்டன் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றும் நாடுகளின் எண்ணிக்கையை **அல்லது** அவற்றில் இடம்பெறும் நிகழ்ச்சிகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.

நாடுகளின் எண்ணிக்கை ..............................

நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை ..............................

97. துணிகளைச் சலவை செய்யப் பயன்படுத்தப்படும் சோடாவில் அடங்கும் இரசாயனப் பொருள் யாது ?

.....................................................................................................................................

98. தூரத்தை அளக்கும் முறையாக இன்னும் மைல் முறையைப் பின்பற்றும் ஒரு நாட்டைக் குறிப்பிடுக.

.....................................................................................................................................

99. E - கழிவுப் பொருள் என்பது யாது ?

.....................................................................................................................................

100. ICT 4 Dev என்பது யாது ?

.....................................................................................................................................

* * *

ජාතික ඇගයීම් හා පරීක්ෂණ සේවාව தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை National Evaluation and Testing Service ශ්‍රී ලංකා විභාග දෙපාර்තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of **Department of Examinations** தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை National Evaluation and Testing Service ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations ජාතික ඇගයීම් හා පරීක්ෂණ සේවාව தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை National Evaluation and Testing Service ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations ජාතික ඇගයීම් හා පරීක්ෂණ සේවාව தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை National Evaluation and Testing

NETS National Evaluation and Testing Service

සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

# இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இல் உள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விசேட திறந்த போட்டிப் பரீட்சை - 2011 (2012)

# OPEN COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO CLASS III OF THE SRI LANKA ADMINISTRATIVE SERVICE – 2011 (2012)

## (04) முகாமைத்துவத்துக்கான உளச்சார்பு
## Aptitude for Management

**இரண்டு மணித்தியாலம்**
**Two hours**

பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்

**மிக முக்கியம் :**



* பென்சிலால் எழுதப்படும் விடைத்தாள்களும் அழிக்கும் (வெண்) மை பயன்படுத்தப்பட்ட விடைத்தாள்களும் மதிப்பிடப்படமாட்டாது.
* பகுதி I இற்கு விடை எழுதும் போது பின்வருமாறு இலக்கங்கள் எழுதப்படாத முறையை விட வேறு முறையில் எழுதப்படும் இலக்கங்களைக் கொண்ட விடைத்தாள்களும் மதிப்பிடப்படமாட்டாது.

**1 2 3 4**

இங்கும் பக்கம் 3 இலும் பக்கம் 5 இலும் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் உமது சுட்டெண்ணை எழுதுக.

..............................................
சுட்டெண்

சரியானது என உறுதிப்படுத்துகிறேன்.

..............................................
நோக்குநரின் முதலெழுத்தொப்பம்

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் :**

* இவ்வினாத்தாள் **இரண்டு** பகுதிகளை **12** பக்கங்களில் கொண்டுள்ளது.
* பகுதி **I** இல் **25** பலவினுள் தெரிவு வினாக்களும் பகுதி **II** இல் **25** குறுகிய விடை வகை வினாக்களும் இடம்பெற்றுள்ளன.
* எல்லா வினாக்களுக்கும் விடைகளை **இத்தாளிலேயே** எழுதுக.
* இவ்வினாத்தாளுக்குரிய நேரம் **இரண்டு மணித்தியாலம்** ஆகும்.
* மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.
* **உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டா.**
* விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்.
* விடைகளைத் தெளிவாக **நீல** அல்லது **கறுப்பு** மைப் பேனாவினால் எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**
* இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதன் ஒளிப்பிரதியை (photocopy) எடுத்தல் என்பன குற்றங்களாகும்.
* **தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற எழுத்துகள், அழிக்கும் (வெண்) மைப் பயன்பாடு, பென்சிலின் பயன்பாடு என்பவற்றுக்கு மதிப்பீட்டின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டா.**

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| பக்க எண் | | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|---|
| பகுதி I | 2 | 1 – 3 | |
| | 3 | 4 – 10 | |
| | 4 | 11 – 14 | |
| | 5 | 15 – 20 | |
| | 6 | 21 – 25 | |
| பகுதி II | 7 | 26 – 30 | |
| | 8 | 31 – 35 | |
| | 9 | 36 – 40 | |
| | 10 | 41 – 45 | |
| | 11 | 46 – 48 | |
| | 12 | 49 - 50 | |
| | | மொத்தம் | |

| | | |
|---|---|---|
| மொத்தம் | இலக்கத்தில் | |
| | எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் 1 | |
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் 2 | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |


(பக். 2 ஐப் பார்க்க

## பகுதி I

- **1** தொடக்கம் **25** வரையுள்ள வினாக்களுக்குரிய விடையைத் தரப்பட்டுள்ள சம்பவங்களையும் சந்தர்ப்பங்களையும் கொண்டு எழுத வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் **இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.

- **1** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்கள் பின்வரும் சம்பவத்தை/சந்தர்ப்பத்தை அடிப்படையாய்க் கொண்டவை.

> மின்சார சேவைக் கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறைவேற்று அலுவலராகப் பொது முகாமையாளர் பணியாற்றும் அதேவேளை நிர்வாகம், நிதி, கணக்காய்வு, தொழினுட்பவியலும் சேவைகளும், பராமரிப்பு என்னும் பிரிவுகளுக்குப் பொறுப்பான முகாமையாளர்களும் உள்ளனர். இதற்கு மேலதிகமாக ஒவ்வொரு பிரிவுடனும் உதவி முகாமையாளர்கள் இணைக்கப்பட்டு இருக்கும் அதேவேளை பராமரிப்பு, தொழினுட்பவியலும் சேவைகளும் என்னும் பிரிவுகளின் கீழ் மேற்பார்வை அலுவலர்களும் வேலை முகாரிகளும் சேவையாற்றுகின்றனர். கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள், நோக்கங்கள், சட்டங்கள், கொள்கைகள், திட்டங்கள் ஆகியவற்றைத் தயாரிக்கும் பணிகள் தவிசாளர், பணிப்பாளர் சபை, பொது முகாமையாளர் ஆகியோரைக் கொண்ட உயர் முகாமையினால் மேற்கொள்ளப்படும் அதேவேளை திட்டங்கள், கொள்கைகள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தலும் சேவையைப் பெறுபவர்களிடம் கொண்டு செல்லலும் ஏனைய பணியாளர் குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றன.
>
> பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஒரு முறைமையான அமையமாகச் செயற்படும் மின்சார சேவைக் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய பொது முகாமையாளர் திரு. கமிலஸ் பர்ணாந்து ஆவார். நிறுவனத்தின் தலைவராக மிகுந்த ஆர்வத்துடன் செயற்படும் திரு. பர்ணாந்து அதிகாரம் பெற்ற தலைவராகப் பிரசித்தி பெற்றுள்ளார். கூட்டுத்தாபனத்தின் பணியாளர் சபைக்கு முழுமையாக ஆதரவாகச் செயற்படும் திரு. பர்ணாந்துவிடம் முகாமை உட்பட ஏனைய சேவையாளர்கள் வெறுப்புக் கொண்டுள்ளனர். கடும் கோட்பாடுகளுடன் செயற்படுகின்ற, கடும் நிர்வாகத்தை மேற்கொள்கின்ற திரு. பர்ணாந்துவின் தீர்மானங்கள் தொடர்பாகச் செல்வாக்குச் செலுத்துவதற்கு முகாமைக்கு அல்லது ஏனைய சேவையாளர்களுக்கு வாய்ப்பு இல்லை. இந்நிலைமையில் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு சேவையாளர்களிடம் முறைமையற்ற ஒழுங்கமைப்பும் உருவாகியுள்ளது.

**1.** மின்சார சேவைக் கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள் அவர்களுடைய பொறுப்புகளுக்கும் பதவிகளுக்கும் ஏற்பச் சரியான ஒழுங்கு முறையில் கூட்டமாக்கப்பட்டிருப்பதைத் தெரிந்தெடுக்க.

(1) உயர் மட்ட முகாமையாளர்கள், பிரிவுகளுக்குப் பொறுப்பான முகாமையாளர்கள், தாழ் மட்ட முகாமையாளர்கள்
(2) உயர் மட்ட முகாமையாளர்கள், நடுத்தர மட்ட முகாமையாளர்கள், தாழ் மட்ட முகாமையாளர்கள்
(3) பிரதம நிறைவேற்று அலுவலர், உயர் மட்ட முகாமையாளர்கள், தாழ் மட்ட முகாமையாளர்கள்
(4) பிரதம நிறைவேற்று அலுவலர், நடுத்தர மட்ட முகாமையாளர்கள், தாழ் மட்ட முகாமையாளர்கள் (……)

**2.** திரு. கமிலஸ் பர்ணாந்து எதற்கு உரியவர் ?

(1) பிரதம நிறைவேற்று அலுவலர் கூட்டத்திற்கு
(2) பிரதம செயற்பாட்டு அலுவலர் கூட்டத்திற்கு
(3) உயர் மட்ட முகாமைக்கு
(4) நடுத்தர மட்ட முகாமைக்கு (……)

**3.** மின்சார சேவைக் கூட்டுத்தாபனத்தின் தாழ் மட்ட முகாமைக்குரியவர்கள் யாவர் ?

(1) கணக்காளர்
(2) உதவி முகாமையாளர்
(3) பிரிவுக்குப் பொறுப்பான முகாமையாளர்
(4) வேலை முகாரி (……)

4. மின்சார சேவைக் கூட்டுத்தாபனம் ஒரு புதிய கிராமிய மின்சாரத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசித்துள்ளது. இதற்கேற்ப அம்மின்சாரத் திட்டத்தை உரிய காலச் சட்டத்தினுள் ஏற்படுத்துவதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருப்பது
   (1) உயர் மட்ட முகாமையிடம்.
   (2) நடுத்தர மட்ட முகாமையிடம்.
   (3) பொது முகாமையாளரிடம்.
   (4) பணிப்பாளர் சபையிடம். (......)

5. மின்சார சேவைக் கூட்டுத்தாபனத்தின் உதவிச் சேவை அலுவலர்களுடன் நேரடியாகத் தொடர்புபடும் அலுவலர் கூட்டம்
   (1) உயர் மட்ட முகாமையாளர்கள்.
   (2) தாழ் மட்ட முகாமையாளர்கள்.
   (3) நடுத்தர மட்ட முகாமையாளர்கள்.
   (4) பணிப்பாளர் சபை. (......)

6. திரு. கமிலஸ் பர்ணாந்துவின் தலைமைப் பாங்கின் ஓர் இயல்பாக **அமையாதது**
   (1) தீர்மானத்தை மேற்கொள்ளும் தனியுரிமை அவரிடம் இருத்தல்.
   (2) திரு. கமிலஸ் பர்ணாந்துவின் எடுத்துக்காட்டும் பிரதிவிம்பம் சுற்றாடல் கூட்டுத்தாபனத்தில் இருத்தல்.
   (3) கூட்டுத்தாபனத்தில் தாழ் சேவையாளர்களின் ஆக்கத்திறன் பங்களிப்பிற்கு வாய்ப்பு இருத்தல்.
   (4) கூட்டுத்தாபனத்தில் கடும் ஒழுக்காற்றையும் நிர்வாகத்தையும் கொண்டு செல்லல். (......)

7. திரு. கமிலஸ் பர்ணாந்துவின் தலைமைப் பாங்கிற்கு எதிரான பாங்காக இருக்கத்தக்கது
   (1) அதிகாரத் தலைமைப் பாங்கு
   (2) பூரண நிர்வாகத் தலைமைப் பாங்கு
   (3) பங்குபற்றும் (சனநாயகத்) தலைமைப் பாங்கு
   (4) சுதந்திரமான அதிகாரத் தலைமைப் பாங்கு (......)

8. திரு. கமிலஸ் பர்ணாந்துவின் தலைமைப் பாங்கிலிருந்து மின்சாரக் கூட்டுத்தாபனம் பெறத்தக்க ஒரு சிறந்த பேறு
   (1) கூட்டுத்தாபனத்தின் சவால்மிக்க சந்தர்ப்பங்களில் எளிதாகத் தீர்மானங்களை அடையத்தக்கதாயிருத்தல்.
   (2) கூட்டுத்தாபனத்தில் முனைப்பான செயற்பாடுகள் உருவாகாமை
   (3) கீழமைந்த சேவையாளர்களின் பங்களிப்பு கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்கத்தக்கதாக இருத்தல்
   (4) சேவையாளர்களிடம் தலைமை தொடர்பாக நம்பிக்கை ஏற்படுதல் (......)

9. பின்வரும் இயல்புகளிடையே ஒரு சிறந்த நிர்வாகத் தலைவரிடம் இருக்க வேண்டிய இயல்பைத் தெரிந்தெடுக்க.
   (1) தலைவர் நிதமும் எம்மைப்பற்றிக் கதைத்தல்
   (2) தலைவர் தவறுள்ள இடங்களைக் கண்டுபிடித்தல்.
   (3) தலைவர் எல்லோரிடமும் அதிகாரத்தைக் கையளித்தல்
   (4) தலைவர் தனது குழுக்களை ஊக்குவித்தல். (......)

10. பின்வரும் கூற்றுகளிடையே முறைமையற்ற அமையம் பற்றி மிகச் சரியான கூற்று யாது ?
   (1) முறைமையான அமையத்தில் முறைமையற்ற அமையம் உருவாகலாம்.
   (2) முறைமையற்ற அமையத்தில் சட்டரீதியான நிலைமை உண்டு.
   (3) முறைமையான அமையத்தில் முறைமையற்ற அமையங்கள் கட்டாயம் காணப்படும் ஓர் இயல்பாகும்.
   (4) முறைமையற்ற அமையத்தின் ஓர் உறுப்பினர் வேறொரு முறைமையற்ற அமையத்தின் உறுப்புரிமையைப் பெற முடியாது. (......)


(பக். 4 ஐப் பார்க்க

● **11** தொடக்கம் **20** வரையுள்ள வினாக்கள் பின்வரும் சம்பவத்தை/சந்தர்ப்பத்தை அடிப்படையாய்க் கொண்டவை.

ரஜரட்டை விவசாய அதிகாரசபை அரசாங்கத்தின் ஒரு நியதிச்சட்டமுறை நிறுவகமாகும். ஏறத்தாழப் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் நட்டமடைந்து வந்த அரசாங்க நிறுவகமாகவிருந்த இந்த அதிகாரசபை கடந்த ஆண்டில் அரசாங்க நியதிச்சட்டமுறை நிறுவகங்கள் பற்றி ஆராயும் பாராளுமன்றக் குழுவின் அறிக்கையில் இலாபம் பெறும் அரசாங்க நிறுவகப் பட்டியலுடன் சேர்க்கப்பட்டுள்ளது.

இவ்வதிகாரசபையின் தற்போதைய முகாமையாளரின் நல்ல, தொலைநோக்குள்ள தீர்மானங்கள், தலைமைத்துவம் ஆகியவற்றின் விளைவாகக் கடந்த இரு ஆண்டுகளில் அதிகார சபை விரைவான முன்னேற்றமடைந்துள்ளது. கடந்த இரு ஆண்டுகளில் அதிகாரசபையின் வினைத்திறன், பயனுறுதி (effectiveness), பலன்தருதிறன் (productivity) ஆகியன உயர் மட்டத்திற்கு வந்திருக்கும் அதேவேளை அதற்குச் சேவையாளர்களின் நல்ல மனப்பாங்கு விருத்தியைப் போன்று சேவையாளர் ஊக்குவிப்பும் முக்கியமானதாகும். இதற்காக முகாமைத்துவத்தினால் சேவையாளர்களின் வினைத்திறன் வளர்ச்சி, நலன், மனப்பாங்கு அபிவிருத்தி ஆகியவற்றுக்கான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் அதேவேளை அதிகாரசபையின் பௌதிகச் சுற்றாடல் அபிவிருத்திக்காகப் பல்வேறு பலன்தருதிறன் எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுக்கு மேலதிகமாக அதிகார சபையின் சேவைகளை உகந்த நியமத்தின் கீழ் நடைமுறைப்படுத்தல் தொடர்பாகச் சர்வதேசத் தரச் சான்றிதழும் கிடைத்துள்ளது. இவ்வாண்டில் அதிகாரசபை பலன்தருதிறன் போட்டிகளில் பங்குபற்ற வேண்டும் எனவும் முகாமை தீர்மானித்துள்ளது.

11. ரஜரட்டை விவசாய அதிகாரசபையின் வினைத்திறன் அதிகரிப்பதற்கு ஒரு காரணமாக இருப்பது
   (1) அதிகாரசபை உகந்த நோக்கங்களையும் குறிக்கோள்களையும் கொண்டிருத்தல்.
   (2) நோக்கங்களையும் குறிக்கோள்களையும் நிறைவேற்றுவதில் வளங்கள் உகந்த விதத்தில் பிரயோகிக்கப்பட்டிருத்தல்
   (3) நெடுங்கால நோக்கங்களும் குறிக்கோள்களும் நிச்சயப்படுத்தப்பட்டிருத்தல்
   (4) நோக்கங்களையும் குறிக்கோள்களையும் நிறைவேற்றுவதற்கு உத்தித் திட்டங்களைப் பின்பற்றுதல் (......)

12. ஒரு நிறுவகத்தின் முன்னேற்றத்தை எடுத்துக்காட்டும் குறுகிய கால அளவீட்டுக் கோல்
   (1) பலன்தருதிறன்  (2) பயனுறுதி
   (3) வினைத்திறன்  (4) வினையாற்றல் (......)

13. ரஜரட்டை விவசாய அதிகாரசபையின் பலன்தருதிறனை அளக்கத்தக்க ஓர் எளிய சமன்பாடு யாது ?

   (1) $\text{பலன்தருதிறன்} = \dfrac{\text{பயனுறுதி}}{\text{உள்ளீடுகள்}}$

   (2) $\text{பலன்தருதிறன்} = \dfrac{\text{வினைத்திறன்}}{\text{உள்ளீடுகள்}}$

   (3) $\text{பலன்தருதிறன்} = \dfrac{\text{உள்ளீடுகள்}}{\text{பயப்பு}}$

   (4) $\text{பலன்தருதிறன்} = \dfrac{\text{பயப்பு}}{\text{உள்ளீடுகள்}}$ (......)

14. ரஜரட்டை விவசாய அதிகாரசபையின் பயனுறுதியின் மூலம் எடுத்துக்காட்டப்படுவது
   (1) அவ்வதிகாரசபை எவ்வளவு தூரத்திற்கு எதிர்பார்த்துள்ள நோக்கங்களை அடைந்துள்ளது என்பது
   (2) உள்ளீடுகளுக்கும் பயப்புக்கும் இடையேயுள்ள அளவறி தொடர்புடைமை
   (3) செய்ய வேண்டிய செயல்கள் சரியாக நடைபெற்றுள்ளனவையா என்பது
   (4) வளங்கள் உகந்தவாறு முகாமிக்கப்பட்டுள்ளதா என்பது (......)


(பக். 5 ஐப் பார்க்க

15. ரஜரட்டை விவசாய அதிகாரசபையின் அலுவலகப் பௌதிகச் சுற்றாடல் அபிவிருத்திக்காகப் பிரயோகிக்கப்படத்தக்க பலன்தருதிறன் எண்ணக்கருவைத் தெரிந்தெடுக்க.

(1) 5 m' S எண்ணக்கரு

(2) 5 S எண்ணக்கரு

(3) 7 m' S எண்ணக்கரு

(4) 8 S எண்ணக்கரு (......)

16. ரஜரட்டை விவசாய அதிகாரசபையின் அலுவலகத்தின் சேவைகள் உகந்த முறையினூடாகத் தக்க தரத்தில் நடைபெறுவதன் மூலம் அவ்வதிகாரசபைக்குக் கிடைக்கத்தக்க சர்வதேச தரச் சான்றிதழ்

(1) ISO 9000 : 2008 தரச் சான்றிதழ்

(2) ISO 9001 : 2008 தரச் சான்றிதழ்

(3) ISO 9002 : 2008 தரச் சான்றிதழ்

(4) ISO 9003 : 2008 தரச் சான்றிதழ் (......)

17. ரஜரட்டை விவசாய அதிகாரசபையின் பலன்தருதிறன் எண்ணக்கருக்களை நடைமுறைப்படுத்தல், பலன்தருதிறன் வளர்ச்சி அடைதல் ஆகியவற்றின் விளைவாக அவ்வதிகாரசபை பங்குபற்றத்தக்க தேசிய மட்டத்திலான போட்டித் தொடர்

(1) தேசியத் தரக் கட்டுப்பாட்டு விருதுப் போட்டித் தொடர்

(2) தேசிய பயனுறுதி விருதுப் போட்டித் தொடர்

(3) தேசிய பலன்தருதிறன் விருதுப் போட்டித் தொடர்

(4) அரசாங்க சேவைப் பலன்தருதிறன் விருதுப் போட்டித் தொடர் (......)

18. அரசாங்க நியதிச்சட்டமுறைச் சபைகளினதும் நிறுவகங்களினதும் பணிகளை விசாரணை செய்யும் பாராளுமன்றக் குழு

(1) அரசாங்கச் செயற்றிட்டங்கள் பற்றிய பாராளுமன்றக் குழு

(2) அரசாங்கச் செயற்றிட்டங்கள், கூட்டுத்தாபனங்கள் என்பன பற்றிய ஆலோசனைக் குழு

(3) பொதுச் செயற்றிட்டங்கள் பற்றிய குழு

(4) பொதுச் செயற்றிட்டங்கள் பற்றிய பாராளுமன்ற உறுப்பினர் குழு (......)

19. ரஜரட்டை விவசாய அதிகாரசபையின் சேவையாளர்களிடம் மனப்பாங்கு விருத்தியில் செல்வாக்குச் **செலுத்தாத** ஒரு காரணியாக அமைவது

(1) சம்பளமும் படிகளும்

(2) மேற்பார்வை

(3) பதவி உயர்வுகளுக்காகத் திறந்த வாய்ப்பு

(4) தொழிற்சங்கங்களின் செல்வாக்கு (......)

20. ரஜரட்டை விவசாய அதிகாரசபையின் சேவையாளர்களை ஊக்குவித்தல் என்பது

(1) அதிகாரசபையின் வினைத்திறனுக்காகச் சேவையாளர்களின் பங்களிப்பைக் கட்டாயம் பெற்றுக் கொள்ளல்.

(2) அதிகாரசபையின் சேவைகளுக்காகச் சேவையாளர்களின் உயர்ந்தபட்சப் பங்களிப்பை அவர்களுடைய விருப்பத்துடன் பெற்றுக் கொள்வதற்கு அவர்களைத் தூண்டுதல்

(3) அதிகாரசபையின் பலன்தருதிறன் வளர்ச்சிக்காகச் சேவையாளர்களின் உயிர்ப்பான பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளல்

(4) அதிகாரசபையின் குறிக்கோள்களையும் நோக்கங்களையும் நிறைவேற்றுவதற்குச் சேவையாளர்களின் ஆக்கபூர்வமான பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளல் (......)

- **21** தொடக்கம் **25** வரையுள்ள வினாக்கள் பின்வரும் சம்பவத்தை/சந்தர்ப்பத்தை அடிப்படையாய்க் கொண்டவை.

> கிராம இடை வீதி அபிவிருத்திக்காகக் கிராமிய வீதி அபிவிருத்திச் சபையை அரசாங்கம் அண்மையில் அமைத்தது.
>
> இச்சபையை நிறுவிய பின்னர் அதன் பணிப்பாளர் சபையும் உயர் முகாமையும் கூடிச் சபையின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் நிச்சயப்படுத்திக் கொண்டு திட்டங்களைத் தயாரித்தன. அவ்வாறு நிச்சயப்படுத்தப்பட்ட திட்டங்களை நிச்சய இலக்குகளுடனும் காலவெல்லையிலும் நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதற்கும் கிராமிய வீதி அபிவிருத்திச் சபையின் பணியாளர் குழுவின் தேவைகளுக்காகப் பணியாளர் குழுவாக்கத்தை மேற்கொண்டு எல்லாப்பணிகளையும் மேற்பார்வை செய்து சபையின் வகிபாகத்தை வழிப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
>
> அவ்வாறு சபையின் புறச்சுற்றாடல் காரணிகள் தொடர்பாக மிகுந்த கவனத்தைச் செலுத்திக் கொண்டு சபையின் உட்சுற்றாடலை உகந்தவாறு தாபிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

21. கிராமிய வீதி அபிவிருத்திச் சபையின் முகாமையின் பணிகளின் ஒழுங்குமுறை
    (1) திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல், வழிப்படுத்தல், பணியாளர் குழுவாக்கல் ஆகும்.
    (2) திட்டமிடுதல், வழிப்படுத்தல், பணியாளர் குழுவாக்கல், ஒழுங்கமைத்தல் ஆகும்.
    (3) ஒழுங்கமைத்தல், வழிப்படுத்தல், பணியாளர் குழுவாக்கல், திட்டமிடுதல் ஆகும்.
    (4) திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல், பணியாளர் குழுவாக்கல், வழிப்படுத்தல் ஆகும். (……)

22. கிராமிய வீதி அபிவிருத்திச் சபையின் முகாமையினால் பணியாளர் குழுவாக்கல் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணி சபையின்
    (1) நோக்கங்களை நிச்சயப்படுத்தல்
    (2) குறிக்கோள்களை நிச்சயப்படுத்தல்
    (3) மனிதவலுத் தேவைகள் பற்றித் திட்டமிடுதல்
    (4) பணிகள் பற்றிப் பணியாளர் குழுவிற்கு அறிவுறுத்தல் (……)

23. கிராமிய வீதி அபிவிருத்திச் சபையின் முகாமையினால் சேவையாளர்களை வழிநடத்தல், ஊக்குவித்தல், வழிகாட்டல் என்னும் செயன்முறைக்கு வழங்கத்தக்க பெயர்
    (1) வழிப்படுத்தல்
    (2) பணியாளர் குழுவாக்கல்
    (3) திட்டமிடுதல்
    (4) ஊக்குவித்தல் (……)

24. கிராமிய வீதி அபிவிருத்திச் சபையின் ஓர் உள்ளகச் சுற்றாடல் காரணி
    (1) நுகர்வோர்
    (2) சேவை பெறுபவர்கள்
    (3) சபையின் நோக்கங்களும் குறிக்கோள்களும்
    (4) முதலீட்டாளர்கள் (……)

25. கிராமிய வீதி அபிவிருத்திச் சபையின் ஒரு புறச் சுற்றாடல் காரணி
    (1) வளம்
    (2) முகாமையாளர்
    (3) நோக்கங்கள்
    (4) போட்டியாளர்கள் (……)


(பக். 7 ஐப் பார்க்க

## பகுதி II

- **26** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள சம்பவத்தை / சந்தர்ப்பத்தை அடிப்படையாய்க் கொண்டு சுருக்கமாக விடை எழுதுக..
- **26** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்கள் பின்வரும் சம்பவத்தை/சந்தர்ப்பத்தை அடிப்படையாய்க் கொண்டவை.

2012. 04. 12 ஆந் திகதி பி.ப 2.18 அளவில் இந்தோனேசியாவில் சுமாத்திரா தீவிற்கு அண்மையில் ஏற்பட்ட வலிமையான நிலநடுக்கம் காரணமாக இலங்கையின் கடற்கரை வலயத்தில் சுனாமி நிலைமை ஏற்படலாமென அனர்த்த முகாமை நிலையம் எச்சரித்தது. விசேடமாகத் தெற்குக் கடற்கரை வலயத்தில் அத்திகதியில் பிற்பகல் 4.50 அளவில் சுனாமி ஏற்படலாமென எச்சரிக்கப்பட்டது.

தென்மாகாணத்தில் ஒரு பிரதேசச் செயலகமாகிய பரகம பிரதேசச் செயலாளர் பிரிவில் ஏறத்தாழ 10 கிராம அலுவலர் பிரிவுகள் கடற்கரை வலயத்தைச் சேர்ந்தவை. இக்கடற்கரை வலயத்தில் ஏறத்தாழ 500 குடும்பங்கள் வதிகின்றன.

திரு. சுனிமல் பெரேரா பரகம பிரதேசச் செயலாளர் ஆவார். சிங்கள, தமிழ்ப் புத்தாண்டு விடுமுறைக்காக அன்று திரு. சுனிமல் பெரேரா தமது பிரிவிலிருந்து ஏறத்தாழ 50 km தூரத்தில் இருக்கும் தமது வீட்டில் தங்கியிருந்தார். பி.ப 2.50 அளவில் அவர் தமது செல்லிடத் தொலைபேசிக்கு அனர்த்த முகாமை நிலையத்தினால் சுனாமி நிலைமை பற்றிய முதல் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பதை அறிந்தார்.

26. திரு. சுனிமல் பெரேராவிற்கு முன்னால் இருந்த பிரதான சவால் யாது ?

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

27. அனர்த்த முகாமைத்துவ நிலையத்திலிருந்து கிடைத்த எச்சரிக்கை தொடர்பாகத் திரு. சுனிமல் பெரேரா உடனடியாக மேற்கொள்ள வேண்டியிருந்த **இரு** நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

..............................................................................................................................

..............................................................................................................................

28. சுனாமி நிலைமையை எதிர்கொள்வதற்குத் திரு. சுனிமல் பெரேரா மேற்கொள்ள வேண்டியிருந்த **இரு** முன் நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

29. கடற்கரை வலயத்திலிருந்து மக்களை வெளியேற்றுவதற்கு மேற்கொள்ள வேண்டியிருந்த இரு நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

30. சுனாமி நிலைமையை எதிர்கொள்வதற்கு உதவி பெறப்பட வேண்டியிருந்த, அவருடைய பிரதேசச் செயலாளர் பிரிவில் இருந்த **இரு** அரசாங்க நிறுவகங்களைக் குறிப்பிடுக.

..............................................................................................................................

..............................................................................................................................

● **31** தொடக்கம் **35** வரையுள்ள வினாக்கள் பின்வரும் சம்பவத்தை/சந்தர்ப்பத்தை அடிப்படையாய்க் கொண்டவை.

> அரசாங்கத்தின் உத்தியோகபூர்வத் தகவல்களை மக்களிடம் அறிவிப்பதற்கு அரசாங்கம் அரசாங்கத் தகவல் நிலையத்தை நிறுவி, திரு. வோல்ரர் சுபசிங்காவை அதன் பணிப்பாளர் நாயகமாக நியமித்தது. இதற்கு மேலதிகமாக மாவட்ட மட்டத்தில் உதவிப் பணிப்பாளர்களும் நியமிக்கப்பட்டனர்.
>
> ஐக்கிய நாடுகள் அமையத்தின் மனித உரிமைகள் பற்றிய அமர்வில் இலங்கைக்கு எதிராக ஒரு யோசனையை அங்கீகரித்துக் கொள்வதற்கான ஆயத்தம் பற்றிய தகவல்கள் அந்நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டன. அந்த யோசனையில் இடம்பெற வேண்டிய தகவல்களின் உண்மையற்ற நிலை பற்றியும் அதன் மூலம் இலங்கையில் ஏற்படும் தாக்கம் பற்றியும் பிரதேசச் செயலாளர் பிரிவு மட்டத்தில் மக்கள், மக்களின் பிரதிநிதிகள், சமயத் தலைவர்கள் ஆகியோருக்கு அறிவுறுத்துவதற்கான ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு திரு. வோல்ரர் சுபசிங்காவிற்கு அரசாங்கம் அறிவுறுத்தியிருந்தது.

**31.** பிரதேச நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைப்பதற்காகத் திரு. சுபசிங்கா தொடர்பு கொள்ளத்தக்க **இரு** பிரதேச நிறுவகக் கட்டமைப்புகளைக் குறிப்பிடுக.

.................................................................................................................................

.................................................................................................................................

**32.** அறிவுறுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரிப்பதற்குத் தொடர்புபடுத்தப்பட வேண்டிய **இரு** வளப் பங்காளர்களைக் குறிப்பிடுக.

.................................................................................................................................

.................................................................................................................................

**33.** அறிவுறுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டத்திற்காகப் பிரதேச மக்கள் பிரதிநிதிகளைத் தொடர்புபடுத்தக்க விதத்தைச் சுருக்கமாக விளக்குக.

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

**34.** விரிவுரைகளுக்கு மேலதிகமாக, மக்களை அறிவுறுத்துவதற்கு மேற்கொள்ளத்தக்க **இரு** மாற்று நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

.................................................................................................................................

.................................................................................................................................

**35.** பிரதேசச் சமயத் தலைவர்களுக்கு அறிவுறுத்துவதற்கு நடைமுறைப்படுத்தத்தக்க ஓர் உத்தம நிகழ்ச்சித்திட்டத்தைச் சுருக்கமாக விளக்குக

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................


(பக். 9 ஐப் பார்க்க

● **36** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் பின்வரும் சம்பவத்தை/சந்தர்ப்பத்தை அடிப்படையாய்க் கொண்டவை

> வட மாகாணத்தின் விளையாட்டுப் பணிகளைப் புனரமைப்புச் செய்வதற்கு வட மாகாண விளையாட்டு அதிகாரசபை அமைக்கப்பட்டது. பயங்கரவாதப் போர் காரணமாகப் பல ஆண்டுகளாகத் தடைப்பட்டிருந்த வட மாகாணத்தின் விளையாட்டுப் பணிகளை மேம்படுத்தி அம்மாகாணத்தில் உள்ள பாடசாலை விளையாட்டு வீரர்களையும் இளைஞர்களையும் தேசிய, சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல் இவ்வதிகாரசபையின் பிரதான பொறுப்பாகும்.
>
> திரு. எஸ். சுந்தரராஜா இவ்வதிகாரசபையின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அவரின் கீழ் பிரதிப் பணிப்பாளர் (விளையாட்டுகள்), பிரதிப் பணிப்பாளர் (தொழினுட்பவியல்) என்றவாறு இரு அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். இதற்கு மேலதிகமாக நேரடியாகப் பணிப்பாளருக்குப் பொறுப்பான பிரதிப் பணிப்பாளர் மட்டத்தைச் சேர்ந்த ஒரு தலைமை உள்ளகக் கணக்காய்வாளரும் நியமிக்கப்பட்டார். அவ்வாறே ஓர் உதவிப் பணிப்பாளரும் (விளையாட்டுகள்) நியமிக்கப்பட்டார். இதற்கு மேலதிகமாக அதிகாரசபையின் நிர்வாகப் பணிகளுக்காகப் பணிப்பாளருக்கு நேரடியாகப் பொறுப்பான உதவிப் பணிப்பாளர் மட்டத்திற்குக் கீழ் இருக்கும் ஒரு நிர்வாக அலுவலரும் நியமிக்கப்பட்டார்.

36. வடமாகாண விளையாட்டு அதிகாரசபைக்காக ஒரு "தொலைநோக்குக் (vision)" கூற்றைத் தயாரிக்க.

..............................................................................................................................

37. வடமாகாண விளையாட்டு அதிகாரசபையின் **இரு** குறிக்கோள்களைக் குறிப்பிடுக.

..............................................................................................................................

..............................................................................................................................

38. வடமாகாண விளையாட்டு அதிகாரசபைக்கு முன்னால் உள்ள பிரதான சவாலைச் சுருக்கமாக விளக்குக.

..............................................................................................................................

..............................................................................................................................

39. வடமாகாணத்தில் இருக்கும், விளையாட்டுத் திறன்கள் உள்ளவர்களை இனங்காண்பதற்குச் செயற்படுத்தத்தக்க ஒரு நிகழ்ச்சித்திட்டத்தைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

40. மேற்குறித்த பந்திகள் தொடர்பாக வடமாகாண விளையாட்டு அதிகாரசபையின் ஒழுங்கமைப்புக் கோட்டுப்படத்தைக் காட்டுக.

● **41** தொடக்கம் **45** வரையுள்ள வினாக்கள் பின்வரும் சம்பவத்தை/சந்தர்ப்பத்தை அடிப்படையாய்க் கொண்டவை.

ரஸ்நாயக்கபுரப் பிரதேசக் கல்வி அலுவலகத்தின் பணிப்பாளராகத் திரு. சிறிமேவன் சுரவீரா பதவியேற்று தற்போது ஏறத்தாழ ஓர் ஆண்டு ஆகின்றது.

இரு ஆண்டுகளுக்கு முன்னர் ரஸ்நாயக்கபுரப் பிரதேசக் கல்வி அலுவலகம் மிகவும் திறமையற்ற, முறைமையற்ற அலுவலகமாகப் பிரசித்தி பெற்று இருந்தது. விசேடமாக உத்தியோகபூர்வப் பணிகளுக்காக அலுவலகத்திற்கு வரும் ஆசிரியர்கள் போன்று சாதாரண மக்களும் பல்வேறு இடர்களுக்கு உட்பட்டனர்.

எனினும் திரு. சிறிமேவன் சுரவீரா பணியேற்ற பின்னர் அவர் அலுவலகத்தின் எல்லாப் பிரிவுகளையும் மாற்றியமைத்து அவ்வலுவலகத்திலிருந்து வினைத்திறனுள்ள சேவையைப் பெறத்தக்க சூழலை அமைத்துள்ளார்.

இங்கு தமது பணியாளர் குழுவின் மனப்பாங்குகளை விருத்தி செய்வதற்கும் குழுக்களின் உணர்ச்சிகளை மாற்றுவதற்கும் தர வட்டங்களை அமைத்தல் போன்ற செயற்பாடுகள் அறிமுகஞ்செய்யப்பட்டன. இதற்கு மேலதிகமாக அலுவலகத்தின் பௌதிகச் சூழலைத் துப்புரவாகவும் ஒழுங்குமுறையாகவும் சேவை பெறுபவர்களின் வசதியை அடிப்படையாகக் கொண்டு அமைப்பதற்குப் பஞ்சவிதி எண்ணக்கரு உட்படப் பல்வேறு பலன்தருதிறன் நிகழ்ச்சித்திட்டங்கள் அறிமுகஞ்செய்யப்பட்டன. அவ்வாறே பணியாளர் குழுவில் உள்ள எல்லாச் சேவையாளர்களினதும் பிரச்சினைகளை செவிமடுத்து, அவர்களின் பணிகள் பற்றிய கற்கையை மேற்கொண்டு, நியாயமான வேலைப் பகிர்வு மேற்கொள்ளப்பட்டது.

41. திரு. சிறிமேவன் சுரவீரா பணிப்பாளராகப் பதவியேற்கும்போது அவருக்கு முன்னால் இருந்த முக்கிய சவாலைச் சுருக்கமாக விளக்குக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

42. திரு. சிறிமேவன் சுரவீரா பணியேற்பதற்கு முன்னர் ரஸ்நாயக்கபுர பிரதேசக் கல்வி அலுவலகத்தின் வினைத்திறனின்மையில் செல்வாக்குச் செலுத்திய **இரு** காரணங்களைக் குறிப்பிடுக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

43. திரு. சிறிமேவன் சுரவீரா தனது அலுவலகத்தின் வினைத்திறனைக் கூட்டப் பயன்படுத்திய **இரு** விதிமுறைகளைக் குறிப்பிடுக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

44. திரு. சிறிமேவன் சுரவீராவிடம் உள்ள **இரு** நல்ல முகாமைப் பண்புகளைக் குறிப்பிடுக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

45. ரஸ்நாயக்கபுரப் பிரதேசக் கல்வி அலுவலகத்திற்கு வரும் சேவை பெறுபவர்களுக்காகத் திரு. சிறிமேவன் சுரவீரா அலுவலகத்தில் மேற்கொண்ட **இரு** மாற்றங்களைக் குறிப்பிடுக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

● **46** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் பின்வரும் சம்பவத்தை/சந்தர்ப்பத்தை அடிப்படையாய்க் கொண்டவை.

> ஹரிதபுர மாநகரசபை தொடர்பாக அம்மாநகரசபைப் பிரதேசத்தில் வதியும் மக்களிடம் கடும் அதிருப்தி உள்ளது.
>
> குப்பையை அகற்றுவதற்கும் முகாமை செய்வதற்கும் உகந்த வேலைத்திட்டம் இல்லாமை, சபைக்குரிய வீதிகளை உகந்தவாறு பராமரிக்காமை, வீதி விளக்குகளை உகந்தவாறு பராமரிக்காமை போன்ற குற்றச்சாட்டுகள் மாநகரசபைக்கு எதிராகத் தொடர்ந்து தெரிவிக்கப்பட்டுள்ளன.
>
> அவ்வாறே நகரத்தின் உணவகங்களும் கடைகளும் துப்புரவாக இல்லாமை, சபைக்குப் பல்வேறு பணிகளுக்காக வரும் மக்களிடமிருந்து மாநகரசபைச் சேவையாளர்கள் இலஞ்சம் பெறுகின்றமை போன்ற குற்றச்சாட்டுகளும் மக்களினால் மாநகர சபைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளன.

இம்மாநகரசபையின் புதிய மாநகரசபை ஆணையாளராக நீர் நியமிக்கப்பட்டுள்ளீர் எனக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு நடைமுறையான உத்தம விடைகளை எழுதுக.

**46.** உமக்கு முன்னால் உள்ள **இரு** பிரதான சவால்களைக் குறிப்பிடுக.

..........................................................................................................

..........................................................................................................

**47.** குப்பைகளை முகாமிப்பதற்கு உமது மாநகர முதல்வருக்கு (மேயருக்கு)ச் சமர்ப்பிப்பதற்கான ஓர் உத்தம யோசனையைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

**48.** நீர் நகரசபை நியாயாதிக்கப் பிரதேசத்தில் உள்ள உணவகங்களினதும் கடைகளினதும் தூய்மையை உறுதிப்படுத்துவதற்கு நடைமுறைப்படுத்தத்தக்க ஒரு நிகழ்ச்சித்திட்டத்தைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................



(பக். 12 ஐப் பார்க்க

49. மாநகர சபைச் சேவையாளர்கள் மக்களிடமிருந்து இலஞ்சத்தைப் பெற்றுக் கொள்வதைத் தடுப்பதற்கு மேற்கொள்ளத்தக்க ஒரு நடவடிக்கையைக் குறிப்பிடுக

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

50. மாநகர சபையின் பணிகளுக்காக மாநகர மக்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு உகந்த ஒரு நிகழ்ச்சித்திட்டத்தைத் தெரிவிக்க.

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

❋ ❋ ❋